# News Release

VAUGHAN

# வாகனின் மேற்கு முனையில் சேவை புரியும் புதிய YRP துணை நிலையம்

**வாகன், ஒன். (நவ. 29, 2024) -** நவ. 29 அன்று மேயர் ஸ்டீவன் டெல் டூக்கா யார்க் ரீஜினல் போலீஸ் (YRP) தலைவர் ஜிம் மெக்ஸ்வீன் உடன் இணைந்து இந்தச் சுற்றுவட்டாரங்களில் வாழும் மக்களுக்குச் சேவை புரியவும் பாதுகாக்கவும் ஒரு புதுமையான கூட்டாண்மை மூலம் வாகனின் மேற்கு முனையில் முதலாவது YRP துணை நிலையம் விரைவில் வரவிருக்கும் செய்தியை அறிவித்துள்ளனர்!

இது 2025ஆம் வருட முற்பகுதியில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் துணை நிலையத்தை நிறுவுவது நகரத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. நகரத்துக்குச் சொந்தமான க்ளீன்பர்க்கின் 10418 இஸ்லிங்டன் அவென்யூவில் உள்ள கட்டிடத்தில் இது நிறுவப்படுகிறது. இந்த நகரம் தற்போது காவல்துறைச் சேவைக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சொத்து மறுசீரமைப்பைச் செய்துவருகிறது.

துனை மேயர், யார்க் ரீஜினல் போலீஸ் சேவை வாரியத்தில் சேவை புரியும் உள்ளூர் மற்றும் பிராந்திய மன்ற உறுபினர் லிண்டா ஜாக்சன் உட்பட வாகன் நகர்மன்ற உறுப்பினர்கள் இந்த முக்கிய சமூகப் பாதுகாப்பு அறிவிப்பைக் குறிக்கும் வண்ணம் கலந்துகொண்டனர். மேயர் டெல் டூக்கா மற்றும் துணை மேயர் ஜாக்சன் ஆகியோர் இந்தப் புதிய மேற்கு முனை துணை நிலையத்துக்கான முயற்சியை முன்னின்று செயல்படுத்தினர். இது YRP-யின் #4 மாவட்டத்தில் அமையவுள்ளது.

வருங்கால தளமானது சமூக உறுப்பினர்கள் காவல் அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளக்கூடிய, புகார் பதிவுசெய்யவும் குற்றத் தடுப்பு தகவல்களைப் பெறவும் பொதுவாக சேவை அல்லது காவல்துறை குறித்த கேள்விகளை எழுப்பவும் 3,600 சதுரடி கொண்ட துணை நிலையமாக இருக்கும். இது செயல்படத் துவங்கியதும் இந்த இடம் செப்டம்பர் 2024இல் மேயர் டெல் டூக்காவும் தலைவர் மெக்ஸ்வீனும் திறந்துவைத்த வாகன் மெட்ரோபாலிடன் சென்டரில் உள்ள துணை நிலையத்தைப் போன்றே இயங்கத் துவங்கும்.

செப்டம்பர் 2024-இல், மேயர் டெல் டூக்கா YRPக்கான கூடுதல் நிதியுதவிக்கு தனது வலுவான ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் யார்க் ரீஜினல் கவுன்சிலில்

பிரதிநிதித்துவம் செய்தார். நவ. 28 அன்று ஒப்புதலளிக்கப்பட்ட YRP-க்கான 2025 பட்ஜெட்டில் 2024-ஐக் காட்டிலும் 7.7 சதவீதம் அதிகரிப்பு இருந்தது. இது 2025-இல் 154 கூடுதல் YRP ஊழியர்களையும் 2026-இல் 150 பேரையும் பணியமர்த்துவதற்கு நேரடியாக வழிவகுக்கும்.

நகரப் பாதுகாப்பும் YRP-இன் தைரியமான முன்கள அதிகாரிகளை வழங்குவதும் நகரக் கட்டுமானத்தின் அடித்தளம் என்பதை வாகன் கவுன்சில் அறிந்துள்ளது. 2022 முதல் 2026 vஅரையிலான நகர்மன்றத்தின் சிறப்பான சேவைக்கான யுக்தி திட்டமிடலில் சமூகப் பாதுகாப்பும் நல்வாழ்வும் ஏழு முன்னுரிமை யுக்திகளில் ஒன்றாக உள்ளது. இது நகரசபையின் முயற்சிகளைத் தொடர்ந்து தெரிவிக்கிறது.

**மேற்கோள்கள்**

”வாகன் எப்போதும் பாதுகாப்பான சமூகமாக இருந்து வந்துள்ளது. ஆனால் சமீப ஆண்டுகளில் நம் குடியிருப்பாளர்களில் பலரும் வாகனம் திருடுபோதல், வீட்டில் திருட்டு ஆகியவற்றை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. துப்பாக்கி குற்றங்களும் அதிகரித்து வருவதைக் காண்கிறோம். இனி இதைப் பொறுத்துக்கொள்ள முடியாது - நம் மக்களைப் பத்திரமாக வைத்துக்கொள்வது எனது மிக முக்கியப் பொறுப்புகளில் ஒன்று. அதனால்தான் நகரக் கூட்டாளியாக YRP உடன் இணைந்து இந்த மிகவும் தேவையான துணை நிலையத்தைத் திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இது காவல்துறையின் இருப்பை கிளீன்பர்க்கிலும் வுட்பிரிட்ஜிலும் அதிகரிக்கும். மேலும், இதனால்தான் குற்றவாளிகளை நமது தெருக்களில் இருந்து விலக்கி சிறையில் வைத்திருக்கச் செய்யும் உண்மையான ஜாமீன் சீர்திருத்தத்தை வலியுறுத்தினேன்.”
- மேயர் ஸ்டீவன் டெல் டூக்கா

”இந்தத் துணை நிலையம் கிளீன்பர்க்கில் சமூகப் பாதுகாப்பைப் பேணும் வேளையில் உள்ளூர் குற்றங்கள் குறித்து விசாரிக்கவும் பதிலளிக்கவும் YRP அதிகாரிகளை நமது சமூகத்தினர் அணுகச் செய்கிறது. சமூகப் பாதுகாப்பு என்பது ஒரு பகிரப்பட்ட பொறுப்பு. பாதுகாப்பில் முன்னேற்றத்தையும் நிலையான சமுதாயங்களையும் உறுதிசெய்வதில் கூட்டாண்மைகள் எவ்வளவு முக்கியமானவை என்பதற்கு வாகன் நகரத்துடனான இந்த ஒத்துழைப்பு ஒரு வலுவான உதாரணம்.”
-யார்க் ரீஜினல் காவல்துறை தலைவர் ஜிம் மெக்ஸ்வீன்

**மேலும் அறிய**

# News Release

- அமைதியான இரவு இயக்கத்தில் வாகன் நகரம் மற்றும் யார்க் ரீஜினல் போலீஸ் கூட்டிணைவு செய்தி வெளியீடு
- பாதிக்கப்படக்கூடிய சமூக உள்கட்டமைப்பைப் பாதுகாக்கும் துணைச் சட்டம் (PDF)
- yrp.ca

-30-

**வாகன் குறித்து:** வாகன் நகரம் 344,412க்கும் மேற்பட்ட மக்கள்தொகையுடன் கனடாவின் மிக வேகமாக வளர்ந்துவரும் நகரங்களுள் ஒன்று. 1991இல் தொடங்கப்பட்ட வாகனில் கான்கார்டு, கிளெய்ன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில், வுட்பிரிட்ஜ் போன்ற சமூகங்கள் அடங்கும். கலாச்சார பன்முகத்தன்மை கொண்ட நகராட்சியானது யார்க் பிராந்தியம் மற்றும் டொரண்டோ பெரும்பாகப் பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடகத் தொடர்பு:** ஜஸ்டின் கவுல், பெருநிறுவன மற்றும் யுக்தி தகவல்தொடர்புகள்
Communications, Marketing and Engagement Department
T. 416-428-7886 E. justin.gaul@vaughan.ca